மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மன்னார்குடி

முன்னிலை :- **திருமதி.A. சீதாலெட்சுமி, M.A.,B.L.,**

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர், நீடாமங்கலம்

மாவட்ட உரிமையியல் நீதிபதி , மன்னார்குடி (முழு கூடுதல் பொறுப்பு)

2023 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 01 ஆம் நாள் புதன்கிழமை

திருவள்ளுவராண்டு 2054 ஸ்ரீ சோபகிருது வருடம் ஐப்பசித்திங்கள் 15 ஆம் நாள்

**இடைநிலை மனு எண். 112/2023-ல்**

**அசல் வழக்கு எண். 22/2017**

ஞானசம்பந்தம் ...மனுதாரர்/வாதி

// **எதிர்**//

1. புண்ணியமூர்த்தி
2. ஜெயபால் ...எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனு என் முன்பாக இறுதியான விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்/வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு. R. சம்பத்குமார் அவர்களும், எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு. S. விஜயன் அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டும், வழக்காவணங்கள் பரிசீலிக்கப்பட்டும், இன்று வரை என் பரிசீலணையிலிருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.....

**உத்தரவு**

இம்மனுவானது கடந்த 17.03.2023 ம் தேதி மனுதாரர்/வாதி முன்னிலையாகாததால் தள்ளுபடி செய்யப்பட்ட வழக்கை மீண்டும் கோப்பில் எடுத்து விசாரணைக்கு உத்தரவிடக்கோரி உ.ந.ச. கட்டளை 9 விதி 9-ன் கீழ்

மனுதாரர்/வாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. மனுவின் சுருக்கம் :-**

இம்மனுவின் மனுதாரர்அசல் வழக்கில் வாதி ஆவார். அசல் வழக்கானது எதிர்மனுதாரர்/பிரதிவாதிகளுக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளைப் பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்யப்பட்டு, பிரதிவாதிகளால் எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டு வழக்கு விசாரணை நிலையில்இருந்து வந்தபோது, இடைநிலை மனு எண். 151/2017 இடைக்கால உறுத்துக்கட்டளைப் பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்ட மனுவானது தள்ளுபடி செய்யப்பட்டதால் பல்வகை மேல் முறையீடு(CMA.2/2018) தாக்கல் செய்யப்பட்டு நிலுவையில் இருந்து வருகிறது. கடந்த 17.03.2023 ம் தேதி Special list-ல் வாய்தா போடப்பட்டிருந்த போது பல்வகை மேல்முறையீடு CMA.2/2018-ல் இவ்வழக்கு ஆவணங்கள் உள்ளதென்று கெடு கேட்கப்பட்டது. மேற்படி வழக்கானது Old suit என்பதால் வழக்கின் நடவடிக்கையை நிறுத்திவைக்க இயலாது என்பதாலும், அசல் வழக்கில் ஸ்டே ஏதும் இல்லாத காரணத்தினாலும் வழக்கானது தள்ளுபடி செய்யப்பட்டது. மேற்படி தள்ளுபடி செய்யப்பட்ட வழக்கை மீண்டும் எடுத்து விசாரணை செய்திட உத்தரவிடக்கோரி மனுதாரரால் இம்மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3. 2ம் எதிர்மனுதார தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிருரையின் சுருக்கம் (1ம் எதிர்மனுதாரர் தனதாக ஏற்றுக்கொள்கிறார்):-**

மனுதாரர், எதிர்மனுதாரர்களுக்கு மன உளைச்சலை கொடுக்கவேண்டும் என்ற நோக்கத்தில் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. ஆகவே, இம்மனுவினை

தள்ளுபடி செய்யவேண்டும் என்று எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

4. இருதரப்பிலும் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை. இருதரப்பிலும் சான்றாவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை.

**5.இம்மனுவில் தீர்வுக்காணப்படவேண்டிய பிரச்சனை யாதெனில்,**

**இம்மனு அனுமதிக்கத்தக்கதா? என்பதே ஆகும்.**

**பிரச்சினை:-**

1. இரு தரப்பு வாதம் கேட்கப்பட்டது. மனு, நிரூபணவாக்குமூலம், எதிருரை, மற்றும் வழக்காவணங்கள் பரிசீலிக்கப்பட்டன. அசல் வழக்கானது நிரந்தர உறுத்துக்கட்டளைப் பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டு , பிரதிவாதிகளால் எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டு, எழுவினாக்கள் வனையப்பட்டு விசாரணைக்காக பட்டியிலில் போடப்பட்டிருந்தபோது, மனுதாரர் முன்னிலை ஆகாததால் தவறுகையின் காரணமாக தள்ளுபடி செய்யப்பட்டுள்ள விபரம் தெரிய வருகிறது. எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் இம்மனுவினைப் பொறுத்து தெரிவித்துள்ள ஆட்சேபணையை கருத்தில் கொள்கிறது. மனுதாரர்/வாதிக்கு அவர்களது தரப்பு கட்சியை நிரூபணம் செய்வதற்கு ஒரு வாய்ப்பு அளிக்கவேண்டும் என்பதாலும், இம்மனுவினை அனுமதிப்பதால் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு எவ்வித இழப்பும் ஏற்பட போவதில்லை என்பதை கருத்திற் கொண்டும் நீதியின் பால் இம்மனுவினை நிபந்தனையின் பேரில் அனுமதிக்கலாம் என்று இந்நீதிமன்றம் தீர்வுக்காண்கிறது.

**முடிவில்,** மனுதாரர்/வாதி, எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு

செலவுத் தொகையாக ரூ.1000/-ஐ செலுத்திவைக்க வேண்டும் மனுவானது அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.

இவ்வுத்தரவு என்னால் சொல்லப்பட்டு சுருக்கெழுத்தரால் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு திறந்த இந்நீதிமன்றத்தில் இன்று ( 01.11.2023) அவையறியப் பகரப்பட்டது.

(ஒம்/-A. சீதாலெட்சுமி),
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மன்னார்குடி.(முகூபொ)

**குறியிடப்பட்ட சான்றாவணங்கள் மற்றும் விசாரிக்கப்பட்ட சாட்சிகள்** :-

**இருதரப்பிலும்** : இல்லை

(ஒம்/-A. சீதாலெட்சுமி),
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மன்னார்குடி.(முகூபொ)